# பரீட்சகரின் அறிக்கை

**மட்டம் I பரீட்சை – 2024 சனவரி**

## (103) பொருளியல்

அதிகளவான பரீட்சார்த்திகள் கணிய ரீதியில் ஏற்றுக் கொள்ளத்தக்க மட்டத்தில் இந்த பொருளியல் வினாத்தாளுக்கு விடையளித்திருந்ததை அவதானிக்க முடிந்தது. எவ்வாறாயினும், மொத்தமாக எடுக்கும்போது, பரீட்சார்த்திகளால் விடையளிக்கப்பட்ட வினாக்களில் சில தவறுகளும் இடம்பெற்றிருந்ததை குறிப்பிட்டாக வேண்டும்.

மதிப்பீட்டுப் பணியின்போது பரீட்சகர்களால் அவதானிக்கப்பட்ட பிரதான சில தவறுகள் கீழே தரப்பட்டுள்ளன :

### <u>பகுதி A</u>

### வினா இல. 01

**பகுதி A** ஆனது முழுமையான பாடத்திட்டத்தை உள்ளடக்கியவாறு கட்டமைக்கப்பட்டிருந்தது. இல. **1.1** தொடக்கம் **1.10** வரையிலான வினாக்களில் தரப்பட்டிருந்த பல்தேர்வு வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்யுமாறும் இல. **1.11** மற்றும் **1.12** ஆகிய வினாக்களுக்கு தரப்பட்ட இரு விடைகளில் ஒன்றைத் தெரிவு செய்யுமாறும் இல. **1.13** மற்றும் **1.14** ஆகிய வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் சரியானதா, தவறானதா எனக் குறிப்பிடுமாறும் கேட்கப்பட்டதுடன் இல. **1.15** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கு குறுகிய விடைகளை அளிக்குமாறும் கேட்கப்பட்டது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக புள்ளிகளைப் பெற்றிருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் மோசமான விடைகளை அளித்திருந்தனர். இதன்போது அவதானிக்கப்பட்ட பொதுவான பலவீனங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன :

**1.1** பல பரீட்சார்த்திகள் வரையறையற்ற மனித விருப்பங்களுடன் தொடர்புடைய வளங்களின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவே அரிதான தன்மையாகும் என்ற சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர்.

**1.2** பலர், பேரினப் பொருளாதாரத்தில் உள்ளடக்கப்படாத பகுதி ''சந்தையில் நுகர்வோரின் நடத்தை'' என்பதைச் சரியாக இனங்கண்டிருந்தனர்.

**1.3** அதிகளவான பரீட்சார்த்திகள் ''பொருளின் விலை மாறாது இருப்பதுடன் வழங்கலின் ஏனைய சகல காரணிகளும் மாறுகின்றன'' என்ற சரியான விடையைத் தெரிவு செய்திருந்தனர்.

இன்னும் சில பரீட்சார்த்திகள் எண்ணக்கரு பற்றி குழப்பமாகவே காணப்பட்டிருந்தனர். அவர்கள், பொருளின் விலை மாற்றமடைவதுடன் வழங்கலின் ஏனைய காரணிகள் மாறாது உள்ளன என்ற தவறான விடையைத் தெரிவு செய்திருந்தனர்.

**1.4** வரைபடத்தில் குறிக்கப்பட்டிருந்த புள்ளி X ஆனது ''முழு வேலை'' என்பதைக் குறிக்கிறது என சரியான விடையை பல பரீட்சார்த்திகள் வழங்கியிருந்தனர்.

**1.5** அதிகமான பரீட்சார்த்திகளிடம் "பயன்பாட்டுக் கோட்பாடு'' என்ற எண்ணக்கரு பற்றிய போதிய அறிவு காணப்படவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது. பயன்பாட்டுக் கோட்பாடு பற்றிய இவ்வினாவுக்கு அளிக்கப்பட்ட விடைகள் திருப்திகரமாக அமையவில்லை என்பதுடன் உரிய மட்டத்தையும் அடைந்திருக்கவில்லை.

**1.6** இந்த வினாவில், தரப்பட்ட ஒரு பொருளுக்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சியை கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. விடையின் பெறுமானமானது ஒன்றை விடக் குறைவானதாக அமைந்திருந்தது. பல பரீட்சார்த்திகள் ''நெகிழ்ச்சியற்றது'' என்ற விடையை வெற்றிகரமாகத் கண்டறிந்திருந்தனர்.

**1.7** இலங்கை மத்திய வங்கியின் 2022 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின்படி, ''தலா வருமானம்'' பற்றிய இவ்வினாவுக்கு அளிக்கப்பட்ட விடைகள் திருப்திகரமானதாக இருக்கவில்லை. இது மத்திய வங்கியின் அறிக்கை பற்றி பரீட்சார்த்திகள் கவனம் செலுத்தவில்லை என்பதையே காட்டுகிறது.

**1.8** நுகர்வோர் மிகையின் சரியான கணிப்பீட்டைப் பல பரீட்சார்த்திகளும் செய்திருந்தனர்.

**1.9** நிறைபோட்டி நிறுவனமொன்றின் சமநிலையானது, விலை சராசரிக் கிரயத்திற்குச் சமமாக இருந்து, நிறுவனம் சாதாரண இலாபத்தை உழைக்கும்போது ஏற்படுகிறது என்பதை பல பரீட்சார்த்திகள் அங்கீகரித்திருந்தனர்.

**1.10** பெரும்பாலான பரீட்சார்த்திகள் இலங்கை மத்திய வங்கியின் பணக் கொள்கையின் ஒரு தரம்சார் கருவியாக கடன் உத்தரவாதங்களுக்கான எல்லைகளை அமைத்தல் காணப்படுகிறது என சரியாக ஏற்பிசைவு செய்திருந்தனர்.

**1.11** ஒரு தனியுரிமை நிறுவனம் சந்தையில் விலை நிர்ணயிப்பாளராகத் தொழிற்படுகிறது என்பதை அதிகளவான பரீட்சார்த்திகள் இனங்கண்டிருந்தனர்.

**1.12** வெளியீட்டின் விகிதாசார அதிகரிப்பை விட உள்ளீட்டின் விகிதாசார அதிகரிப்பு குறைவாக இருக்கும்போது அங்கு குறைவடைந்து செல்கின்ற அளவுத்திட்ட விளைவுகள் காணப்படும் என சில பரீட்சார்த்திகள் தவறாக விடையளித்திருந்தனர்.

**1.13** அதிகளவான பரீட்சார்த்திகள், உற்பத்தியாளர்கள் மீது அரசாங்கம் ஓர் அலகு வரியை விதித்தால் அது வழங்கல் வளையியை வலப்பக்கமாக நகர்த்தும் என்ற கூற்று ஒரு தவறான கூற்று என இவ்வினாவுக்கு சரியாக விடை அளித்திருந்தனர்.

**1.14** உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து உள்ளீட்டுக் காரணிகளும் நீண்ட கால ஓட்டத்தில் மாறிகளாகும் என்ற கூற்று தவறானது என அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடை அளித்திருந்தனர்.

**1.15** பொருளாதார வளர்ச்சி என்றால் என்னவென்பதை பல பரீட்சார்த்திகள் திருப்திகரமாக விபரித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகளின் விடைகள் பூரணமான விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை.

**1.16** தனியுரிமை போட்டிச் சந்தையொன்றின் பண்புகளை அதிகளவான பரீட்சார்த்திகள் இனங்கண்டிருந்தனர். சிலர் வினாவைச் சரியாக வாசிக்காததால் தனியுரிமையின் அம்சங்களை இனங்கண்டு எழுதியிருந்தனர்.

**1.17** வர்த்தக வங்கியொன்றின் தொழிற்பாடுகளாக வைப்புகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் கடன் வழங்கல் என்பவற்றை அதிகளவான பரீட்சார்த்திகள் விடையாள வழங்கியிருந்தனர்.

**1.18** இங்கு வழங்கல் விதியை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்த போதிலும், சலுகையின் கீழான பண்டத்தின் விலைக்கும் வழங்கல் செய்யப்பட்ட கணியத்திற்குமிடையிலான நேர்த்தொடர்பாக வழங்கல் விதி வரையறுக்கப்பட்ட அதே வேளை வழங்கலைக் கணிப்பிடுகையில் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாமல் இருக்கின்றன. சில பரீட்சார்த்திகள் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாதுள்ளது என்பதைக் குறிப்பிட்டிருக்கவில்லை.

**1.19** வழங்கலின் விலை நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகளைக் குறிப்பிடும்போது, பல பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்தபோதும் சில விடைகள் தவறாக எழுதப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

**1.20** ஒரு பொருளாதார அபிவிருத்தியின்போது ஏற்படுகின்ற தரம்சார் மாற்றங்களை அடையாளம் காணும்போது, பல பரீட்சார்த்திகள் கீழ்வருமாறு எழுதியிருந்தனர்: தொழிலின்மையைக் குறைத்தல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், வருமானத்தின் நியாயமான /சமமான பரம்பல் போன்றவை. எவ்வாறாயினும், பொருளாதார அபிவிருத்தியின்போது ஏற்படுகின்ற ஒரு தரம்சார் மாற்றமாக உற்பத்தி அதிகரிப்பு போன்ற கணிய ரீதியான மாற்றங்களைக் குறிப்பிடும் சில பொருத்தமற்ற விடைகளையும் காணக்கிடைத்தது.

## <u>பகுதி B</u>

இப்பகுதியானது நான்கு (04) கட்டாய வினாக்களைக் கொண்டிருந்ததுடன் ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டிருந்தது.

### வினா இல. 02

**(a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவின் இப்பகுதிக்கு உற்பத்திக் காரணிகள் நான்கினைச் (04) சரியாகக் குறிப்பிட்டு வெற்றிகரமாக முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(b)** கீழ்வருவன போன்ற சந்தர்ப்பங்களை அடையாளங் காண்பதன் மூலம் பரீட்சார்த்திகள் இதற்கென ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்; பொருளாதாரமற்ற பொருள்களைப் பொறுத்த மட்டில், வளங்களின் மாற்றுப் பயன்பாடுகள் இல்லாதபோது, செயலற்ற வளங்கள் கிடைக்கின்றபோது, சந்தர்ப்பச் செலவு பூச்சியமாக மாறும்.

**(c)** பொருளாதாரமொன்றின் மூன்று அடிப்படை பொருளாதாரப் பிரச்சினைகளை குறிப்பிட்டு பல பரீட்சார்த்திகளால் 03 புள்ளிகளைப் பெற முடிந்தது. எவ்வாறாயினும், அவற்றை எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று விபரிக்கத் தவறின் ஒதுக்கப்பட்ட மூன்று புள்ளிகளையும் பெற முடியாது போகும்.

## வினா இல. 03

**(a)** சந்தைச் சமநிலை விலை மற்றும் கணியத்தைச் சரியாக கணிப்பிட்டதன் மூலம் பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்தம் 03 புள்ளிகளையும் பெற்றிருந்தனர். பல பரீட்சார்த்திகள் சமன்பாடுகளைத் தீர்க்கும்போது, கணிப்பீட்டு வழுக்களை விட்டதன் காரணமாக இறுதி விடையை அவர்களால் அடைய முடியவில்லை.

**(b)** **(i)** சராசரிக் கிரயத்தையும் (AV) எல்லைக் கிரயத்தையும் (MC) துல்லியமாகக் கணித்திருந்த குறிப்பிடத்தக்க பரீட்சார்த்திகள் காணப்பட்டனர்.

**(ii)** இங்கு, மொத்த உற்பத்தி, சராசரி உற்பத்தி மற்றும் எல்லை உற்பத்தி ஆகியவற்றுக்கிடையிலான உள்ளகத் தொடர்புகளைத் தெளிவாக முன்வைப்பதற்கு பல பரீட்சார்த்திகள் தவறியிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் சரியான வரைபடங்களுடன் அவற்றுக்கிடையிலான உள்ளகத் தொடர்புகளை முன்வைத்திருந்தனர். சிலர் அவற்றுக்கிடையிலான தொடர்புகளைச் சரியாக விபரிக்கத் தவறியிருந்தனர். பரீட்சார்த்திகள் இந்தக் கோட்பாடு பற்றிய மேலதிக அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## வினா இல. 04

**(a)** இவ்வினாவுக்கு விடையளிக்கும்போது, அதிகளவான பரீட்சார்த்திகள் ‘‘பணத்திற்கான கேள்வி’’ இனை பாதிக்கின்ற காரணிகளைச் சரியாக முன்வைத்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் பணத்திற்கான கேள்வி ஏன் எழுந்தது அல்லது திரவத்தன்மைக்கான காரணங்களைத் தவறாகப் புரிந்துகொண்டு, பணத்திற்கான கேள்வியைப் பாதிக்கின்ற பிரதான பேரினப் பொருளாதார மாறிகளாக கொடுக்கல் - வாங்கல்கள், முன்னெச்சரிக்கை மற்றும் ஊகங்கள் போன்ற நோக்கங்களை மேற்கோள் காட்டி விடைகளை அளித்து புள்ளிகளை இழந்திருந்தனர்.

**(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் விலை மட்டத்திற்கும் வட்டி வீதத்திற்குமிடையேயான நேர்த் தொடர்பு பற்றிய சரியான விளக்கம் காணப்படவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது. இதனால், பலர் விலை மட்டத்திற்கும் வட்டி வீதத்திற்குமிடையிலான தொடர்புகளாக நேர்த் தொடர்புகளையும் எதிர்த் தொடர்புகளையும் என இரண்டையுமே குறிப்பிட்டிருந்தனர். எனவே விலை மட்டம் மற்றும் வட்டி வீதம் ஆகியவற்றுக்கிடையிலான உறவுகளைச் சரியாக இனங்காண, பரீட்சார்த்திகளுக்கு விளக்கமும் போதிய அறிவும் வழங்கப்பட வேண்டுமென்பதை அது உணர்த்துகிறது.

**(c)** கேள்வி - இழுப்பு பணவீக்கம் மற்றும் கிரயத் தள்ளல் பணவீக்கம் என "பணவீக்கத்திற்கான காரணங்கள்" தரப்பட்டுள்ளன. ஆனால் சில பரீட்சார்த்திகள் அவற்றை எதிர்பார்த்ததைப் போன்று விபரிக்கத் தவறியிருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருக்கவில்லை.

**வினா இல. 05**

**(a)** ‘இலங்கை அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் வர்த்தகத் தடைகளின் தாக்கங்கள்’’ தொடர்பான பல பரீட்சார்த்திகளின் அறிவு போதியதாக இல்லாததைக் காண முடிந்தது. இது தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு மேம்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் தரப்பட்ட விளக்கங்கள்கூட மிகக் குறைவாகவே இருந்தன.

**(b)** ‘‘தேய்மானம்’’ என்பது எதைக் குறிக்கிறது என்பது பற்றிய சரியான புரிந்துணர்வின்றி சில பரீட்சார்த்திகள் விடையளித்திருந்தனர். எண்ணக்கருவைச் சரியாக இனங்கண்டிருந்த பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்து, மொத்தப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(c)** அதிகளவான பரீட்சார்த்திகள் ஒவ்வொரு நாட்டிற்குமான ஒவ்வொரு பொருளினது உற்பத்தியினதும் ஒப்பீட்டு நயத்தைத் தனித்தனியாகச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். அத்துடன் ஆகக்குறைந்த சந்தர்ப்பச் செலவின் அடிப்படையில், ஒவ்வொரு நாட்டினாலும் எந்தப் பொருள் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதைச் சரியாகக் கணித்திருந்ததுடன் ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

ஆனால் சில பரீட்சார்த்திகள் சந்தர்ப்பச் செலவைக் கணிப்பிடும்போது சரியான தரவுகளைத் தெரிவு செய்வதைத் தவிர்த்திருந்தனர். இதனால் தவறான விடையின் அடிப்படையில் தவறான முடிவுகளை அடைந்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் ஒப்பீட்டு நயத்தைக் கணிப்பிடத் தவறியிருந்ததுடன், ஆகக் குறைந்த சந்தர்ப்பச் செலவைக் கொண்ட நாடு பொருளை உற்ப்ததி செய்ய வேண்டுமென்ற முடிவையும் பரிந்துரைத்திருந்தனர்.

## <u>பகுதி C</u>

**வினா இல. 06**

**(A)** **(a)** பல பரீட்சார்த்திகள் தேசிய வருமானக் கணக்குகளின் குறைபாடுகள் மற்றும் வரையறைகளை வெற்றிகரமாக இனங்கண்டு, குறிப்பிட்டிருந்தனர்.

**(b)** இங்கு, ‘கொள்வனவாளர் விலை’ என்பதால் கருதப்படுவது யாதென விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பாட விடயங்களில் நன்கு பரிச்சயத்தைக் கொண்டிருந்த பரீட்சார்த்திகள் வினாவுக்கு சிறப்பாக விடையளித்திருந்தனர். சிலர் இலக்கியப் பொருளின் அடிப்படையில் விடை அளித்திருந்தனர். இத்தகைய விடைகள் குறிக்கத் தகுதியானவை அல்ல.

**(B)** **(a)** பல பரீட்சார்த்திகள், மொத்த உள்நாட்டுச் செலவினத்தை (GDE) சந்தை விலையில் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர்.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் மொத்த உள்நாட்டுச் செலவினத்துடன் பொருள்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதிகளை சேர்த்து, இறக்குமதிகளையும் நிகர ஏற்றுமதிகளின் சீராக்கத்தையும் கழித்ததன் மூலம் GDP இனைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். சிலர் இறக்குமதிகளைச் சேர்த்தும் ஏற்றுமதிகளைக் கழித்தும் பிழையாகச் செய்திருந்தனர். வேறு ஒரு சில பரீட்சார்த்திகள் நிகர ஏற்றுமதிகளைச் சேர்ப்பதற்குப் பதிலாக கழித்திருந்தனர்.

**(c)** பகுதிகள் **(a), (b)** இற்குச் சரியாக விடையளித்திருந்த பரீட்சார்த்திகள் **பகுதி (c)** இற்கும் சௌகரியமாக விடையளித்திருந்தனர்.

அதாவது, வெளிநாட்டு நிகர முதன்மை வருமானத்தை சந்தை விலையிலான GDP இல் சீராக்கம் செய்வதன் மூலம், சந்தை விலையில் மொத்த தேசிய வருமானம் பெறப்படுகிறது. வெளிநாட்டு நிகர வருமானம் நடைமுறையில் எதிர்மறையாக இருந்தாலும் இந்தப் பயிற்சியில் தரப்பட்டுள்ள வெளிநாட்டு நிகர முதன்மை வருமானம் நேர்மறையாக இருந்தது. ஆயினும் பரீட்சார்த்திகள் அதனைத் தவறாகக் கழித்திருந்தனர். எனவே, பரீட்சார்த்திகள் அதனை எவ்வாறு சீராக்கம் செய்வது என்பது பற்றிக் கற்று, விளங்கிக்கொள்ள வேண்டும்.

**(C)** இலங்கையிலுள்ள தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கான அரசாங்கத்தின் வரிகளால் ஏற்பட்ட சமீபத்திய தாக்கங்களைப் பரீட்சார்த்திகள் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் பலர் அந்த இரண்டு துறைகளையும் எவ்வாறு பாதிக்கிறது என்பதைத் தெளிவாக விபரிக்கத் தவறியிருந்தனர்.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** பாடத்திட்டத்தை முழுமையாகவும் பூரணமாகவும் படிப்பதுடன் புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தையும் செலுத்தவும்.

**(2)** மிகக் கவனத்துடன் வினாவை வாசிப்பதுடன், நேரடி விடைகள் எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புக்களையோ விபரங்களையோ எழுத வேண்டாம்.

**(3)** வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் செவ்வை நிரல் வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடைளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் ஏடு, புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை வாசிக்கவும்.

**(5)** வரைபுகளுக்குச் சரியாகப் பெயரிட்டு விபரிப்பதில் கவனம் செலுத்தவும்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்கள் துல்லியமாக இடப்படுதல் வேண்டும்.

**(7)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

**(8)** கடந்தகால வினாத்தாள்களைச் செய்து பார்த்து, அவற்றை பரிந்துரைக்கப்பட்ட விடைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

**(9)** சரியான நேர முகாமையில் கவனம் செலுத்தவும்.

**(10)** முன்னாயத்தத்துடனும் பரீட்சையை வெற்றிகொள்ளும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -